"DINAMALAR"

PAGE NO: 01

DATE: 09.02.2021

# சதுப்புநில காடுகள் பசுமை நெறிமுறை

## பல்கலைக் கழகத்தில் வெளியீட்டு விழா

**புதுச்சேரி, பிப். 9–**

புதுச்சேரி பல்கலைக் கழகத்தில் சதுப்பு நிலக் காடுகள் பசுமை நெறி முறை வெளியீட்டு விழா நடந்தது.

சதுப்பு நில காடுகளின் பாதுகாப்பிற்கு சர்வதேச அளவில் செயல்படும் 'ராம் சார் கண்வென்ஷன்' அமைப்பின் 50ம் ஆண்டு நிறைவை கொண்டாட, 'சதுப்பு நிலமும் நீரும்' என்ற தலைப்பில் பொது மக்கள், மாணவர்களிடையே இந்திய அரசு சார்பில் விழிப்புணர்வு ஏற்படுத்தி வருகின்றனர்.

புதுச்சேரி பல்கலைக் கழகம், வனம் மற்றும் வன விலங்கு துறை, வேளாண், விவசாயிகள் நலத் துறை, கல்வித்துறை, ஏ.பி.எஸ்.சி.சி நிறுவனங்களுடன் இணைந்து பசுமை நெறி முறை வெளியீட்டு விழா பல்கலை., வளாகத்தில் கொண்டாடப்பட்டது.




புதுச்சேரி பல்கலைக்கழகத்தில் நடந்த விழாவில் துணைவேந்தர் குர்மீத்சிங், துணை வனக்காப்பாளர் வஞ்சுளவள்ளி ஆகியோர் சதுப்புநில காடுகள் பசுமை நெறிமுறையை வெளியிட்டனர்.

விழாவில் 5 குறுந்த லைப்புகளுக்குள் அடங்கிய 'சதுப்பு நிலக்காடுகள் பசுமை நெறிமுறையை' பல்கலைக் கழக துணை வேந்தர் குர்மித்சிங், துணை வனக்காப்பாளர் வஞ்சுளவள்ளி வெளியிட்டனர். பல்கலைக்கழக இயக்குனர் பாலகிருஷ்ணன், வேளாண் இயக்குனர் ராமகிருஷ்ண பால காந்தி, பதிவாளர் சித்ரா, முனைவர் கோல்டா, பேராசிரியர்கள் தேவிபிரசாத், நளினி, சாகின் சுல்தானா, பொறியாளர் சங்கரமூர்த்தி, விழா ஒருங்கிணைப்பாளர் நந்திவர்மன் பங்கேற்றனர்.

இதையொட்டி 400க்கும் மேற்பட்ட அரசுப் பள்ளிகளில் 'ஓவியப் போட்டி' நடத்த பள்ளிக் கல்வி இயக்குனர் ருத்ரகவுடு திட்டமிட்டுள்ளார்.

DINAMANI

9 FEB 2021

PAGE 3

# சதுப்பு நிலக் காடுகள் குறித்த கருத்தரங்கம்



நிகழ்வில் சதுப்பு நிலக் காடுகள் பசுமை நெறிமுறையை வெளியிட்ட புதுச்சேரி பல்கலைக்கழகத் துணைவேந்தர் குர்மீத் சிங், துணை வனப் பாதுகாவலர் வஞ்சுல வள்ளி உள்ளிட்டோர்.

**புதுச்சேரி, பிப். 8:** புதுவை மத்திய பல்கலைக்கழகத்தில் சதுப்பு நிலக் காடுகள் குறித்த கருத்தரங்கம் திங்கள்கிழமை நடைபெற்றது.

சதுப்பு நிலக் காடுகளின் பாதுகாப்புக்காக 'ராம் சார் கன்வென்ஷன்' சர்வதேச அளவில் செயல்பட்டு வருகிறது. இதில், இந்தியாவும் ஒரு அங்கம். இதன் 50-ஆம் ஆண்டு நிறைவைக் கொண்டாடும் வகையில், 'சதுப்பு நிலமும் நீரும்' என்ற தலைப்பில் பொதுமக்கள், மாணவ-மாணவிகள் இடையே விழிப்புணர்வை ஏற்படுத்தும் வகையில், பல்வேறு திட்டங்களைச் செயல்படுத்தி வருகிறது.

அதன்படி, புதுவை பல்கலைக்கழகத்தின் வனம்-வன விலங்குகள் துறை, வேளாண் மற்றும் விவசாயிகள் நலத் துறை, கல்வித் துறை, ஏ.பி.எஸ்.சி.சி. நிறுவனங்களின் சார்பில் கருத்தரங்கம் நடைபெற்றது.

இதில், 5 குறுந்தலைப்புகளில் அடங்கிய சதுப்பு நிலக் காடுகள் பசுமை நெறிமுறையை பல்கலை. துணைவேந்தர் குர்மீத் சிங், துணை வனப் பாதுகாவலர் வஞ்சுல வள்ளி ஆகியோர் வெளியிட்டனர். பேராசிரியர்கள் தேவிபிரசாத், நளினி, சாகின் சுல்தானா, பொறியாளர் சங்கரமூர்த்தி, விழா ஒருங்கிணைப்பாளர் நந்திவர்மன் ஆகியோர் பெற்றுக் கொண்டனர்.

இதைச் சிறப்பிக்கும் வகையில் பள்ளிக் கல்வி இயக்குநர் ருத்ர கௌடு 400-க்கும் மேற்பட்ட அரசுப் பள்ளிகளில் ஓவியப் போட்டிகளை நடத்தத் திட்டமிட்டுள்ளார். மேலும், 'சதுப்பு நிலக் காடுகளின் நண்பன்' என்ற உணர்வை ஊட்ட 'சதுப்பு நிலக் காடுகள் பாதுகாப்பு குழு' தொடங்கத் திட்டமிடப்பட்டுள்ளது.